# பெரம்பலூர் நகராட்சி

**2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் – 14–ம் நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு பெரம்பலூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை : தனிஅலுவலர் (ம) ஆணையாளர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 14.12.2020 | **பொருள் 01 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21 –ன் கீழ் 10.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண் 20557/2020/இ3 நாள். 11.12.2020 ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. | நகர்மன்றத் தீர்மான எண். 421 அனுமதிக்கப்பட்டது |

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட நிதி (ரூ.கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| பெரம்பலூர் நகராட்சி | **10.00** | **8.50** | **1.50** |

மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்காணும் பணிகளை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவும், இந்த பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| | **சிப்பம் - 1** | | | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 01 ல் உள்ள அன்னை நகர், வார்டு எண் 4 ல் உள்ள மல்லிகை நகர் குறுக்கு தெரு , வார்டு எண் 05 ல் உள்ள வெற்றி நகர், வார்டு எண் 06 ல் உள்ள ரகமத் நகர் , சுகனேஷ் நகர், சாமியப்பா நகர் மற்றும் ஆசியா நகர் பகுதி, வார்டு எண் 07 ல் உள்ள ரோஸ் கார்டன் விரிவாக்க பகுதி, வார்டு எண் 07 ல் உள்ள காந்தி நகர் குறுக்கு தெரு பகுதியில் புதிய தார் சாலை மற்றும் தார் சாலை மேம்படுத்தும் பணி | **3.440** | **4.50** | **194.00** |

| | | | | |
|---|---|---|---|---|
| | **சிப்பம் - 2** | | | |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 07 ல் உள்ள பாரதிதாசன் நகர் குறுக்கு தெரு, மதனகோபாலபுரம் குறுக்கு தெரு மற்றும் ரோவர் ஆர்ச் ரோடு பகுதியில் பகுதியில் தார் சாலையை மேம்படுத்தும் பணி | **1.820** | **4.50 & 10.00** | **157.00** |
| | **சிப்பம் - 3** | | | |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 08 ல் உள்ள விவேகானந்தர் தெரு . அவ்வையார் தெரு பகுதி. கே.கே. நகர் மெயின்ரோடு மற்றும் குறுக்கு தெரு . நியூகாலனி பகுதி , ராஜா நகர் முதல் குறுக்கு தெரு மற்றும் 2 வது குறுக்கு தெரு பகுதியில் தார் சாலையை மேம்படுத்தும் பணி | **3.700** | **4.50 & 4.20 & 7.00** | **190.00** |
| | **சிப்பம் - 4** | | | |
| 4 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 09 ல் உள்ள அவ்வையார் தெரு , நேஷ்னல் ITI பின்புறம் பகுதி , தீரன் நகர் பகுதி , வார்டு எண் 10 ல் உள்ள Housing Board பகுதி, வேலன் நகர் பகுதி , வார்டு எண் 11 ல் உள்ள அம்மன் நகர் மற்றும் குறுக்கு தெரு பகுதியில் புதிய தார் சாலை மற்றும் தார் சாலையை மேம்படுத்தும் பணி | **3.100** | **4.50** | **180.00** |
| | **சிப்பம் - 5** | | | |
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11 ல் உள்ள சுந்தர் நகர் விரிவாக்க பகுதி , VIP Garden பகுதி , குணகோமதி தெரு, வெங்கடாஜலபதி நகர், சித்தர் கோயில் அருகில், வார்டு எண் 14ல் உள்ள மதனகோபாலபுரம் 5 வது தெரு, வார்டு எண் 21 ல் உள்ள பெரிய சாமி கோயில் அருகில் , துரைசாமி நகர் மற்றும் அப்புசாமி நகர் பகுதியில் புதிய தார் சாலை மற்றும் தார் சாலையை மேம்படுத்தும் பணி | **2.800** | **4.50 & 4.20** | **165.00** |
| | **சிப்பம் - 6** | | | |
| 6 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 04 ல் உள்ள அம்மன் நகர் பகுதி , வார்டு எண் 07 ல் உள்ள உப்போடை பகுதி மற்றும் ஆரோக்கிய நகர் பகுதி , வார்டு எண் 08 ல் உள்ள வடக்கு தெரு பகுதி , வார்டு எண் 11 ல் உள்ள சித்தர் கோயில் அக்ஷயா நகர் பகுதியில் புதிய தார் சாலை அமைக்கும் பணி | **1.930** | **4.50** | **114.00** |
| | **மொத்தம்** | **16.790** | | **1000.00** |

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 6698 /2020/இ1

<table>
<tr>
<td>14.12.2020</td>
<td>

**பொருள் 02 :** இந்நகராட்சியின் **பொது நிதி 2020 - 2021** ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான TATA ACE TN -46- P – 1586 மற்றும் TN -46- P – 1597 எண் கொண்ட இரண்டு வாகனங்களை பழுது மற்றும் பராமரிப்பு செய்யும் பணிக்கு 01.12.2020 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**மதிப்பீடு தொகை : 4.00 இலட்சம்**

<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர்களின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் ,<br>ஒப்பந்ததாரர், மேட்டூர்</td><td>399000</td><td>(–) 0.22%<br>மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ் ,<br>ஒப்பந்ததாரர், மேட்டூர்</td><td>402340</td><td>0.58 % மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>

அ.கு.

1. மேற்கண்ட பணிக்கு லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், ஒப்பந்ததாரர், மேட்டூர் என்பவர் மதிப்பீட்டை விட (–) 0.22%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண் : 004649/2020/இ1</u>

</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 422 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>14.12.2020</td>
<td>

**பொருள் 03 :** இந்நகராட்சியின் **பொது நிதி 2020 - 2021** ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான TATA ACE TN -46- P – 1578 மற்றும் TN -46- P – 1584 எண் கொண்ட இரண்டு வாகனங்களை பழுது மற்றும் பராமரிப்பு செய்யும் பணிக்கு 01.12.2020 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**மதிப்பீடு தொகை : 4.00 இலட்சம்**

<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர்களின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் ,<br>ஒப்பந்ததாரர், மேட்டூர்</td><td>399100</td><td>(–) 0.25%<br>மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ் ,<br>ஒப்பந்ததாரர், மேட்டூர்</td><td>402340</td><td>0.58 %<br>மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>

அ.கு.

1. மேற்கண்ட பணிக்கு லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், ஒப்பந்ததாரர், மேட்டூர் என்பவர் மதிப்பீட்டை விட (–) 0.25%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண் : 004650/2020/இ1</u>

</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 423 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 14.12.2020 | **பொருள் 04 :** பெரம்பலூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டு வரும் பேட்டரியால் இயங்ககூடிய வாகனங்கள் (Battary Operator Vehicle - BOV) 4 எண்ணிக்கை பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது என துப்புரவு ஆய்வாளர்களின் 08.12.2020–ம் தேதிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி, வாகனங்கள் பொதுசுகாதார பணிக்காக வீடு வீடாக சென்று குப்பைகளை தரம் பிரித்து வாங்குவதற்கு மிகவும் அவசியமாக உள்ளது. எனவே, மேற்படி, வாகனங்களை பழுதுநீக்கம் பணி செய்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்வதற்கும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.150000/- வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>(அ). பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி, பேட்டரியால் இயங்ககூடிய 4 எண்ணிக்கையிலான வாகனங்களை பழுதுநீக்கம் செய்ய ஆகும் செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண். 7127/2020/எச்1</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 424 அனுமதிக்கப்பட்டது |

// ஒம் // திரு . S. குமரிமன்னன்
தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
பெரம்பலூர் நகராட்சி

# பெரம்பலூர் நகராட்சி

**2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் – 31–ம் நாள் வியாழக் கிழமை காலை 11.00 மணிக்கு பெரம்பலூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை : தனிஅலுவலர் (ம) ஆணையாளர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 31.12.2020 | **பொருள் 01 :** பெரம்பலூர் நகராட்சி ஆணையர் அவர்களது டிசம்பர் 2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் பதிவு செய்யலாம். | நகர்மன்றத் தீர்மான எண். 425<br>பதிவு செய்யப்பட்டது |
| 31.12.2020 | **பொருள் 02 :** 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், பிரிவு 15 ன் கீழ் டிசம்பர் 2020ம் மாதத்தில் மேற்கொண்ட செலவினங்கள் விவரம் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண். 426<br>பதிவு செய்யப்பட்டது |

| வ. எண் | தொகை வழங்கப்பட்ட தேதி/ Section 15 Reg. Page No. | பணி விபரம் | பட்டியல் எண்/ தேதி | தொகை ரூ |
|---|---|---|---|---|
| 01 | 04.12.2020/85 | COVID-19 தொடர்பாக நகர்முழுவதும் சுத்தம் செய்யும் பணிக்காக பிளிச்சிங் பவுடர் வாங்கிய பணி<br>ROC No.1783/2020/H1 | PJV/20-21/ RF000054 Dt:02/12/2020 | 2,36,000- |
| 02 | 04.12.2020/86 | டெங்கு மற்றும் சிக்கன் குனியா நோய் தடுப்பு தொடர்பாக கிருமிநாசினி வாங்கிய பணி<br>ROC No. /2020/H1 | PJV/20-21/ RF000055 Dt:04/12/2020 | 6,30,780- |
| 03 | 04.12.2020/87 | டெங்கு மற்றும் சிக்கன் குனியா நோய் தடுப்பு தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த விளம்பர பதாகைகள், சாமியானா பந்தல், ஒலி பெருக்கி, மைக்செட் மற்றும் ஜென்செட் அமைக்கும் பணி<br>ROC No. /2020/H1 | EJV/20-21/ RF000282 Dt:04/12/2020 | 4,35,500- |

| | | | | |
|---|---|---|---|---|
| 04 | 04.12.2020/88 | வார்டு எண் – 19ல் அமைந்துள்ள கழிப்பறை பழுது சீர் செய்யும் பணி<br>ROC No.6202/2020/E1 | CJV/20-21/<br>RF000090<br>Dt:04/12/2020 | 2,42,811- |
| 05 | 11.12.2020/89 | TN-46Q-8712 என்ற Jetroading Vehicle பழுது சீர் செய்யும் பணி<br>ROC No.623935/2020/E1 | EJV/20-21/<br>RF000257<br>Dt:11/12/2020 | 64,000- |
| 06 | 18.12.2020/90 | நிவர் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கிருமிநாசினி வாங்கியது.<br>ROC No.5765/2020/H1 | PJV/20-21/<br>RF000059<br>Dt:17/12/2020 | 4,11,400- |
| 07 | 18.12.2020/91 | பொது சுகாதார உபயோகத்திற்காக 2 எண்ணிக்கை புல் வெட்டும் இயந்திரம் வாங்கியது.<br>ROC No.6942/2020/H1 | PJV/20-21/<br>RF000062<br>Dt:17/12/2020 | 65,000- |
| 08 | 18.12.2020/92 | நகரரட்சி கலவை உரக்கிடங்கில் தீ பற்றி எரிந்த குப்பையினை இயந்திரம் மூலம் ஒதுக்கும் பணி<br>ROC No. 3209/2020/E1 | CJV/20-21/<br>RF000107<br>Dt:17/12/2020 | 5,00,000- |

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.2384/2020/பி1**

---

31.12.2020

**பொருள் 03 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட இடங்களில் முடித்திருத்தகம்/ அழகுநிலையம்/ ஸ்பா/ மசாஜ் நிலையம் நடத்துவோர் பெரம்பலூர் நகராட்சியால் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை நகராட்சி ஆணையாளரிடமிருந்து பெற்று, 2018–ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (ஐந்தாவது திருத்தம்) சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 40/2018) திருத்தம் செய்யப்பட்ட அட்டவணை –V–ல் உள்ள உட்பிரிவு (ii) மற்றும் (iii)–ல் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக 1920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) பிரிவு 249–ன்படி, உரிமம் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, முடித்திருத்தகம்/ அழகு நிலையம்/ ஸ்பா/ மசாஜ் நிலையம் நடத்துவோரும், நிலைய உரியாளரும் உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டும். உரிமம்பெற தவறும்பட்சத்தில் நிலையத்தை மூடி முத்திரையிடுதல், உள்ளிட்ட அனைத்து சட்டபூர்வ நடவடிக்கைகளையும் மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் V/1920–ன் கீழ் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கையினை செய்திதாளில் விளம்பரம் செய்ய வேண்டியுள்ளது.

எனவே, இப்பொருள் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் முடித்திருத்தம்/ அழகுநிலையம்/ ஸ்பா/ மசாஜ் நிலையம் நடத்துவோரும் நன்கு அறிந்துகொள்ளும் வகையில் செய்தித்தாளில் விளம்பரம் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.50000/- வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையினை பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.7449/2020/எச்1**

நகர்மன்றத் தீர்மான எண். 427 அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 31.12.2020 | பொருள் 04 : பெரம்பலூர் நகராட்சி 20.59 சதுர கி.மீ பரப்பளவில் 21 வார்டுகளை உள்ளடக்கிய நகராட்சியாகும். இந்நகராட்சி அதி வேகத்தில் விரிவடைந்து வருவதாலும் நகர எல்லைக்கு அருகில் உள்ள வருவாய் கிராமங்களிலிருந்து அதிக அளவில் நீர் வரத்து வருவதாலும், நகர பகுதியில் உள்ள நீர்நிலைகள் மற்றும் வரத்து வாய்கால்கள் அவ்வபோது அடைப்பு ஏற்பட்டு சரி செய்ய வேண்டி உள்ளது. இதனை சரி செய்தால் மட்டுமே கால்வாய்களில் நீர் வரத்து சீராக இருக்கும் என்பதாலும் அவ்வபோது ஏற்படும் அடைப்புகள் மற்றும் புதர்கள் நீக்கவேண்டியதன் அவசியம் கருதியும் இந்நகராட்சிக்கு சொந்தமாக JCB இயந்திரம் தேவைப்படுகிறது. எனவே இந்நகராட்சிக்கு 15 வது மத்திய நிதி குழுவின் மூலம் அனுமதிக்கப்படும் Tied Grant லிருந்து ஜே.சி.பி. இயந்திரம் வாங்கிடவும் இப்பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அ.கு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அல்லது 15 வது மத்திய நிதிகுழுவின் மூலம் அனுமதிக்கப்படும் Tied Grant அல்லது அரசால் அனுமதிக்கப்படும் இதர நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 007596/2020/இ1 | நகர்மன்றத் தீர்மான எண். 428 அனுமதிக்கப்பட்டது |
| 31.12.2020 | பொருள் 05 : பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 11 வெங்கடாஜலபதி நகர் , வார்டு எண் 9 ல் உள்ள அவ்வையார் தெரு நேஷ்னல் ITI அருகில் மற்றும் வார்டு எண் 4 ல் உள்ள அண்ணா நகர் , மல்லிகை நகர், வார்டு எண் 11 ல் உள்ள சுந்தர் நகர் விரிவாக்கம் ஆகிய பகுதிகளில் புதியதாக வீட்டு இணைப்பு கொடுக்க பொதுமக்கள் கோரிக்கைக்கு இணங்க புதியதாக பகிர்மான குழாய் அமைக்க ரூ.5.85/- இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு வருவாய் நிதியில் செலவு மேற்கொள்ளவும் அரசிடமிருந்து நிதி வரும் பட்சத்தில் அதனை ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அ.கு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவுகளை மேற்கொள்ளவும் பின்னர் அரசிடமிருந்து நிதி விடுவிப்பு செய்த பின் மேற்படி கணக்கில் ஈடு செய்து கொள்ளவும் மேலும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 007594/2020/இ1 | நகர்மன்றத் தீர்மான எண். 429 அனுமதிக்கப்பட்டது |
| 31.12.2020 | **பொருள் 06 :** பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர்/ தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெரம்பலூர் அவர்களின் 27.11.2019–ம் தேதிய செயல்முறை உத்தரவு கடிதத்தில் பெரம்பலூர் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் –2019–2020–ஆம் ஆண்டு நிதியின் கீழ் பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட துறைமங்கலம் மூன்று ரோட்டில் பஸ்பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு ரூ.6.00 இலட்ச மதிப்பில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட செயல்உத்தரவு கடிதம் மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்க்கும் வைக்கவும் மேலும், மேற்கண்ட பணி அரசு திட்ட பணி என்பதால் பணி முடித்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கயிருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண். 430 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அ.கு<br>1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>2. மேற்கண்ட பணி திட்டப் பணி என்பதால் பணிமுடித்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கயிருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 8950/2019/இ1. | |
| 31.12.2020 | **பொருள் 07 :** பெரம்பலூர் நகராட்சியில் 21 வார்டுகளிலும் தினசரி சேகரிக்கப்படும் மக்கும் திடக்கழிவு பொருட்கள் மற்றும் மக்காத திடக்கழிவு பொருட்கள் தனித்தனியே இந்நகராட்சிக்குட்பட்ட இரண்டு நுண்ணுயிர் செயலாக்க மையங்களில் பயன்படுத்தப்பட்டு உரமாக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தினசரி சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் திடக்கழிவு பொருட்களை Bailing Machine பயன்படுத்தி பிளாஸ்டிகளை குப்பைகளை கட்டு கட்டாக கட்டி அதிக அளவிலான பிளாஸ்டிக் கழிவுகளை ஒரே முறையில் அருகில் உள்ள சிமெண்ட் ஆலைக்கு கொண்டு செல்வதற்கு Bailing Machine கொள்முதல் செய்வதற்கு ரூ.5.00/- இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு வருவாய் நிதியில் செலவு மேற்கொள்ளவும் அரசிடமிருந்து நிதி வரும் பட்சத்தில் அதனை ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அ.கு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவுகளை மேற்கொள்ளவும் பின்னர் அரசிடமிருந்து நிதி விடுவிப்பு செய்த பின் மேற்படி கணக்கில் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் : 007590/2020/இ1** | நகர்மன்றத் தீர்மான எண். 431 அனுமதிக்கப்பட்டது |
| 31.12.2020 | **பொருள் 08 :** இந்நகராட்சிக்குட்பட்ட பாலக்கரை பகுதியில் சிவகாமம் மோட்டார்ஸ் அருகில் திருச்சி சாலையில் உள்ள பாதாள சாக்கடை ஆள் இறங்கும் தொட்டிகளில் அடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் கழிவு நீர் சீரான நிலையில் செல்ல இயலாமல் அப்பகுதியுள்ள ஆள் இறங்கும் தொட்டிகளின் மேற்பரப்பில் வெளியேறும் நிலை ஏற்படுகிறது. பொது மக்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு மேற்கண்ட பகுதியில் ஏற்பட்ட அடைப்பினை சரி செய்யவும், பழுதடைந்து கான்கிரிட் குழாயினை மாற்றியமைக்க ரூ.2.00/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண் : 007593/2020/இ1** | நகர்மன்றத் தீர்மான எண். 432 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 31.12.2020 | **<u>பொருள் 09</u>** பெரம்பலூர் நகராட்சிக்கு சொந்தமான உரக்கலவை கிடங்கில் பழைய குப்பைகளிலிருந்து நுண்ணுயிர் கலவை (Bio Minnig) தயாரிக்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிவிப்பு மாநில செய்தி மக்கள் தொடர்புதுறை இயக்குநர் தலைமை செயலகம் சென்னை அவர்கள் வழியாக விளம்பரம் வெளியிட்ட வகையில் (Accord Advertising Agencies ) சென்னை என்ற நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.96,075/– யை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**<u>ந.க.எண் : 000664/2018/இ1</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 433 அனுமதிக்கப்பட்டது |
| 31.12.2020 | **<u>பொருள் 10</u>** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11 ல் உள்ள வேலவன் நகர் பகுதியில் அமைந்துள்ள பாதாள சாக்கடை திட்டத்திற்கான கழிவு நீருந்து நிலையத்திலிருந்து நெடுவாசல் சாலையில் அமைந்துள்ள பிரதான கழிவு நீருந்து நிலையத்திற்கு செல்லும் வழியில் உள்ள பிரதான கழிவு நீர் குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் கழிவு நீர் சீரான நிலையில் செல்ல இயலாமல் கழிவு நீருந்து நிலையத்தின் மேற்பரப்பில் வெளியேறும் நிலை ஏற்படுகிறது. மேற்படி பகுதியில் ஏற்பட்ட அடைப்பினை ஒரு சில பகுதிகளில் பிரதான குழாய் செல்லும் வழிகளில் உள்ள சாலையின் ஓரங்களில் குழி பறித்து சீரமைக்கவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.1.50/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண் : 007598/2020/இ1</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 434 அனுமதிக்கப்பட்டது |
| 31.12.2020 | **<u>பொருள் 11</u>** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9 துறைமங்கலம் பிரதான குழாய் கழிவு நீருந்து நிலையத்தின் வளாகத்திலிருந்த செல்லும் குழாயில் உடைப்பு ஏற்பட்டு அப்பகுதியில் தரை மேற்பரப்பில் கசிவு கண்டறியப்பட்டது. மேற்படி கசிவினை உடனடியாக சரி செய்யும் பொருட்டு மேலும் கழிவு நீர் தேங்கா வண்ணம் பொது மக்களின் சுகாதார நலன் கருதி உடனடியாக இப்பணியை மேற்கொள்ள ரூ. 3.00/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**<u>ந.க.எண் : 007328/2020/இ1</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 435 அனுமதிக்கப்பட்டது |
| 31.12.2020 | **<u>பொருள் 12</u>** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4 அம்மன் நகர், ஜமாலியா நகர், மல்லிகை நகர், வார்டு எண் 7 டயாணா நகர், ரோஸ் நகர் முதல் காந்தி நகர் வரை, வார்டு எண் 11 அம்மன் நகர் மற்றும் சித்தர் கோயில் பின்புறம் ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகள் மிகவும் சேதமடைந்து வடகிழக்கு பருவமழை காரணமாக மழைநீர் தேங்கி பள்ளமாக இருப்பதாலும் மற்றும் பொது மக்கள் போக்குவரத்திற்கு இடையூராக இருப்பதால் கிராவல் கொண்டு சாலையை சரி செய்யும் பணிக்கு ரூ. 4.95/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம் | நகர்மன்றத் தீர்மான எண். 436 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br><br>ந.க.எண் : 007329/2020/இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.12.2020</td>
<td>பொருள் 13 இந்நகராட்சியின் பொது நிதி 2020- 2021 ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4 அம்மன் நகர், ஜமாலியா நகர், மல்லிகை நகர், வார்டு எண் 7 டயாணா நகர், ரோஸ் நகர் முதல் காந்தி நகர் வரை, வார்டு எண் 11 அம்மன் நகர் மற்றும் சித்தர் கோயில் பின்புறம் ஆகிய பகுதியில் உள்ள சாலைகள் மிகவும் சேதமடைந்து மழைநீர் தேங்கி பள்ளமாக இருப்பதால் அவற்றை கிராவல் கொண்டு சரி செய்யும் பணிக்கு 29.12.2020 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>மதிப்பீடு தொகை : 4.95 இலட்சம்
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர்களின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. G. கண்ணன் ஒப்பந்ததாரர், பெரம்பலூர்</td><td>435169.00</td><td>(–) 0.27% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு .K. காமராஜ் , ஒப்பந்ததாரர், பெரம்பலூர்</td><td>439101.25</td><td>0.63 % மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
அ.கு.<br>1. மேற்கண்ட பணிக்கு திரு. G.கண்ணன் பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–) 0.27%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br><br>ந.க.எண் : 007329/2020/இ1</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 437 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.12.2020</td>
<td>பொருள் 14 பெரம்பலூர் புதிய நகராட்சி அலுவலகத்தில் Counter பிரிவில் உள்ள UPS & Battery மற்றும் வார்டு எண் 12 ல் உள்ள சங்குபேட்டை பகுதியில் உள்ள சமுதாய கூடம் பழுதடைந்த பகுதிகளை சரி செய்து சீரமைக்கவும் மற்றும் அம்மா உணவத்தில் Freezar போன்ற பழுதடைந்த மின் பாகங்களை மாற்றியமைக்கவும் ரூ. 2.10/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் : 007417/2020/இ1</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 438 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.12.2020</td>
<td>பொருள் 15 இந்நகராட்சியின் பொது நிதி 2020- 2021 ஆம் ஆண்டு நிதியின் கீழ் பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 21 வரையுள்ள பாதாள சாக்கடை ஆள் இறங்கும் தொட்டிகளை உயர்த்தும் பணிக்கு 10.12.2020 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>மதிப்பீடு தொகை : 9.80 இலட்சம்</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 439 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருமதி. ஜெயந்தி , ஒப்பந்ததாரர் , பெரம்பலூர் | 861300 | (–) 0.19% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு. கே. காமராஜ் ஒப்பந்ததாரர், பெரம்பலூர் | 865050 | 0.24 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அ.கு.**

**1.** மேற்கண்ட பணிக்கு திருமதி. ஜெயந்தி, பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–) 0.19%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண் : 6205/2020/இ1**

---

31.12.2020

**பொருள் 16** இந்நகராட்சியின் **நிவர் நிதி 2020 - 2021** ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **21** ல் உள்ள AVR நகர் மற்றும் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள பழுதடைந்த சிறுபாலத்தை சீரமைக்கவும் , வார்டு எண் **9** ல் உள்ள அவ்வையார் நகர், வார்டு எண் **11** ல் உள்ள அம்மன் நகர் சாலையில் கிராவல் கொண்டு சீர் செய்யும் பணிக்கு 15.12.2020-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**மதிப்பீடு தொகை : 1.10 இலட்சம்**

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | G. கண்ணன், ஒப்பந்ததாரர், பெரம்பலூர் | 96305. 51 | (–) 0.32% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | K. காமராஜ் , ஒப்பந்ததாரர், பெரம்பலூர் | 97616. 92 | 1.04 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அ.கு.**

1. மேற்கண்ட பணிக்கு G. கண்ணன் பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–) 0.32%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 2456/2020/இ1**

நகர்மன்றத் தீர்மான எண். 440 அனுமதிக்கப்பட்டது

---

31.12.2020

**பொருள் 17** இந்நகராட்சியின் **நிவர் நிதி 2020 - 2021** ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட கலெக்டர் ஆபிஸ் ரோடு, கனரா வங்கி, பழைய பேருந்து நிலையம் மற்றும் ரோவர் ஆர்ச் ரோடு ஆகிய பகுதிகளில் சேதமடைந்த சாலைகளை செப்பனிடும் (Patch work) பணிக்கு 15.12.2020 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**மதிப்பீடு தொகை : 3.50 இலட்சம்**

நகர்மன்றத் தீர்மான எண். 441 அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s. SPT & Co ஒப்பந்ததாரர், பெரம்பலூர் | 307304 | (–) 0.22% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | G. கண்ணன், ஒப்பந்ததாரர், பெரம்பலூர் | 310320 | 0.76 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அ.கு.**

1. மேற்கண்ட பணிக்கு **M/s. SPT & Co** பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–) 0.22%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண் : 2456/2020/இ1</u>**

| | | |
|---|---|---|
| 31.12.2020 | **<u>பொருள் 18</u>** இந்நகராட்சியில் டெங்கு காய்ச்சல் ஒழிப்பு தடுப்பு நடவடிக்கை தீவிரமாக மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதங்களின் மூலமாகவும் ஆய்வுக்கூட்டத்தின் வாயிலாகவும் பெரம்பலூர், சுகாதார பணி துணை இயக்குநரின் ந.க.எண்.3072/அ4/2019, நாள்.03.06.2020-ம் தேதிய கடிதத்தின் மூலமாகவும் பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு, சிக்கன்குனியா நோய்களை கட்டுப்படுத்த கொசுப்புழு ஒழிப்புபணி, புகைமருந்து அடிக்கும்பணி மற்றும் கிருமிநாசினிகள் தெளிப்பதற்கும் ஒரு வார்டுக்கு 2 களப்பணியாளர்கள் வீதம் 42 களப்பணியாளர்களை தற்காலிகமாக நியமித்து கொசுப்புழுக்களின் அடர்த்தி மற்றும் காய்ச்சல் ஆகியவற்றை தொடர் கண்காணிப்பு செய்து கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள தெரிவிக்கப்பட்டதற்கிணங்க இந்நகர்மன்ற திர்மான என். 324 நாள்.30.06.2020–ன்படி 42 களப்பணியாளர்களை **60** நாட்களுக்கும் மற்றும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.374, நாள்.31.08.2020–ன்படி **89** நாட்களுக்கும் தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேற்படி டெங்கு கொசுபுழு ஒழிப்பு பணி மேற்கொள்வதற்காக பெறப்பட்ட அனுமதி காலம் முடிவடைய உள்ளதால் துப்புரவு ஆய்வாளர்களின் **22.12.2020–**ம் தேதிய குறிப்பில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்காக களப்பணியாளர்களை (DBC Worker) கொண்டு பணிமேற்கொள்ள மேலும் **60** நாட்களுக்கு நீட்டிப்பு செய்து வழங்ககோரி குறிப்பு சமர்ப்பித்துள்ளார்கள்.<br>தற்சமயம், டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்காக ஈடுபட்டு வரும் பணியாளர்கள் டெங்கு ஒழிப்பு பணிகளை திறம்பட செய்துவருவதாலும் இந்கராட்சி ஒப்பந்தபணியாளர்களை வழங்கிவரும் OurLand Engineering Works Chennai என்ற நிறுவனத்தின் மூலம் தினக்கூலி அடிப்படையில் களப்பணியாளர்களை பழைய விலைவிகிதத்தில் பெற்று பணிகள் மேற்கொண்டால் செலவினம் குறையும் என்பதால் மேற்படி நிறுவனத்திடம் பணியாளர்களைப் பெற்று டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்வதற்காக இப்பணியின் அவசர அவசியம் கருதி 42 களப்பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் வழங்கிட சம்மதம் கோரி Our Land Engineering Works Chennai நிறுவனத்திற்கு அறிவிப்பு கடிதம் அனுப்பியதில் மேற்படி நிறுவனம் 24.12.2020–ம் தேதிய கடிதத்தில் 42 களப்பணியாளர்களை 60 நாட்களுக்கு பழைய விலை விதித்தில் வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்.<br>இந்நகராட்சியில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு நாளொன்றுக்கு 42 களப்பணியாளர்கள் வீதம் **60** நாட்களுக்கு தினக்கூலி அடிப்படையில் அமர்த்தும் நிலையில் **60** (42X337 = 14154 X 60 = 849240/-) தோராயமாக ரூ.850000/- (ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இச்செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண். **442** அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு:–</u>**<br>1. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் துணை இயக்குநர், பொதுசுகாதார பணிகள் அவர்களின் ந.க.எண்.3072/அ4/2019, நாள்.03.06.2020ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு டெங்கு, சிக்கன்குனியா மற்றும் கொரோனோ வைரஸ் தொற்றுநோய் பரவாமல் இருக்க தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு 60 நாட்களுக்கு 42 தினக்கூலி பணியாளர்கள் ஏற்கனவே ஒப்பந்தப்பணியாளர்களை பொதுசுகாதாரப்பிரிவிற்கு வழங்கிவரும் Our land Engineering Works Chennai என்ற நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் **ரூ.850000/-க்கும்** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண்.2762/2020/எச்1</u>** | |
| 31.12.2020 | **<u>பொருள் 19</u>** இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வார்டு பகுதிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் குழாய், உப்பு தண்ணீர் குழாய் மற்றும் கேட்வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை பழுது சீர் செய்யும் பணிக்கு ரூ. 9.65/- இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகைக்கு குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**அ.கு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**<u>ந.க.எண். 007592 /2020/ இ1</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 443 அனுமதிக்கப்பட்டது |
| 31.12.2020 | **<u>பொருள் 20</u>** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 21 வரையுள்ள திறந்த வெளி கிணறுகள், பொது சுகாதார பிரிவு மற்றும் பொறியியர் பிரிவில் குடிநீர் பராமரிப்பு பணிக்கு தேவையான பிளிச்சிங் பவுடர் அலுவலக இருப்பில் குறைவாக உள்ளதால் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.5.00/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**<u>ந.க.எண் : 007591/2020/இ1</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 444 அனுமதிக்கப்பட்டது |
| 31.12.2020 | **<u>பொருள் 21</u>** பெரம்பலூர் நகராட்சியின் பணிகள் குறித்த நான்கு ஆண்டு சாதனைகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதத்திற்கிணங்க பொதுமக்கள் அறியும் வண்ணம் விளம்பரம் வெளியிடப்பட்டது. மேலும் தமிழக முதல்வர் வருகையை முன்னிட்டு செய்திதாளில் விளம்பரம் வெளியிட்டமைக்கும் கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br>1. தமிழக நியூஸ் பில் எண். 936 நாள். 25.10.2020 - ரூ. 14000<br>2. தமிழக நியூஸ் பில் எண். 956 நாள். 17.12.2020 - ரூ. 15000<br>**மொத்தம் - ரூ. 29000**<br>மேற்கண்ட பட்டியல் தொகை விளம்பரம் வெளியிட்ட நிறுவனங்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண். 445 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அ-கு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**<u>ந.க.எண். 10718/2017/ இ1</u>** | |
| 31.12.2020 | **<u>பொருள் 22</u>** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 1 முதல் 21 வரை உள்ள நகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் உள்ள மின் மோட்டார்களின் ஏற்படும் பழுதுகளை பழுது சீர்செய்யும் பணிக்கு ரூ.9.80 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அ-கு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**<u>ந.க.எண். 7292/2020/ இ1</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 446 அனுமதிக்கப்பட்டது |
| 31.12.2020 | **<u>பொருள் 23</u>** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1,2,3,4,6,7 மற்றும் 14 ஆகிய பகுதிகளில் உள்ள திறந்த வெளி கிணறுகள் , சிறுமின்விசை பம்புகள் ஆகியவற்றில் கதவுகள் , மின்ஒயர்கள் , HDPE பைப்புகள், மின் மோட்டார்கள் , ஸ்டாட்டர் ஆகியவை பழுதாகி உள்ளதால் அவற்றை சரி செய்யும் பணிக்கு ரூ.9.85/- இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அ-கு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**<u>ந.க.எண். 7379/2020/ இ1</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 447 அனுமதிக்கப்பட்டது |
| 31.12.2020 | **<u>பொருள் 24</u>** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 12,13,15,16,19,20 மற்றும் 21 ஆகிய பகுதிகளில் உள்ள திறந்த வெளி கிணறுகள், சிறுமின்விசை பம்புகள் ஆகியவற்றில் கதவுகள், மின்ஒயர்கள், HDPE பைப்புகள், மின் மோட்டார்கள், ஸ்டாட்டர் ஆகியவை பழுதாகி உள்ளதால் அவற்றை சரி செய்யும் பணிக்கு ரூ.9.90/- இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அ-கு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**<u>ந.க.எண். 7364/2020/ இ1</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 448 அனுமதிக்கப்பட்டது |
| 31.12.2020 | **<u>பொருள் 25</u>** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை இணைப்பு இல்லாத குறுக்கு தெருக்களில் கழிவு நீர் குழாய்கள் மற்றும் ஆள் இறங்கும் தொட்டிகள் அமைத்து ஏற்கனவே பாதாள சாக்கடை இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ள பகுதியில் உள்ள குழாய்களுடன் இணைக்கும் பணிக்கு ரூ.9.80/- இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அ-கு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**<u>ந.க.எண். 7597/2020/ இ1</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 449 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>31.12.2020</td>
<td><u>பொருள் 26</u> இந்நகராட்சியின் பொது நிதி 2020- 2021 ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட துறைமங்கலம் கழிவு நீர் உந்து நிலையத்தில் உள்ள 35 HP மின் மோட்டார் பழுதடைந்து உள்ளதால் அவற்றை சரி செய்யும் பணிக்கு 18.09.2020 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>மதிப்பீடு தொகை : 2.50 இலட்சம்
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர்களின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. M/s . V.B. Associates ஒப்பந்ததாரர், சென்னை</td><td>202800</td><td>(–) 0.49% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திருமதி ஜெயந்தி, ஒப்பந்ததாரர், பெரம்பலூர்</td><td>206300</td><td>1.23 % மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
அ.கு.<br>1. மேற்கண்ட பணிக்கு திரு. M/s . V.B. Associates சென்னை, என்பவர் மதிப்பீட்டை விட (–) 0.49%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><u>ந.க.எண் : 004966/2020/இ1</u></td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 450 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.12.2020</td>
<td><u>பொருள் 27</u> இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5,8,9,10,11,17 மற்றும் 18 ஆகிய பகுதிகளில் உள்ள திறந்த வெளி கிணறுகள், சிறுமின்விசை பம்புகள் ஆகியவற்றில் கதவுகள், மின்ஒயர்கள், HDPE பைப்புகள், மின் மோட்டார்கள், ஸ்டாட்டர் ஆகியவை பழுதாகி உள்ளதால் அவற்றை சரி செய்யும் பணிக்கு ரூ.9.90/- இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br><u>ந.க.எண். 7378/2020/ இ1</u></td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 451 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.12.2020</td>
<td><u>பொருள் 28</u> தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 மற்றும் அதன் விதிகள் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை திருத்திய நடைமுறைகள் மற்றும் அரசாணை (நிலை) எண்.181, நாள்.19.09.2008-ன்படி இந்நகர்மன்ற தீர்மானம் எண்.15, நாள். 29.01.2018 ன் மூலம் பொதுஏலம்விடப்பட்ட கீழ்க்காணும் 8 குத்தகை இனங்களின் உரிமகாலம் 31.03.2021 ல் முடிவடைகிறது. கீழ்காணும் உரிம இனங்களுக்கு நகராட்சி சட்ட விதிகள் மற்றும் அரசாணையின்படி 01.04.2021 முதல் 31.03.2024 முடிய உள்ள மூன்றாண்டு கால தொகுப்பிற்கு உரிமம் வழங்க ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் கோரவும், 8 உரிம இனங்களுக்கும் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் பங்குபெற கீழ்கண்ட விவரப்படி ஒவ்வொரு உரிம இனத்திற்கும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு தனித்தனியே கலம் (3)ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை ஏல ஒப்பந்தபுள்ளி பொறுப்புத்தொகையாகவும், கலம் (4)ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு குறைவில்லாத மதிப்புடைய சொத்து மதிப்பு சான்றும், சொத்துமதிப்பு சான்று இல்லாதபட்சத்தில் கலம்–(2)ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை கூடுதல் பொறுப்புத்தொகையாகவும் செலுத்தி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் பங்குபெற அனுமதிக்கவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 452 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

**பட்டியல் எண்.01**

| வ. எண். | 31.03.2021–ல் குத்தகை உரிமகாலம் முடிவடையும் குத்தகை உரிம இனங்கள் விபரம் |
|---|---|
| 1 | பெரம்பலூர் நகராட்சி அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் மற்றும் காமராஜர் பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் |
| 2 | பெரம்பலூர் நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் |
| 3 | வண்டிப்பேட்டை உரிமம் – நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தலைசுமை மற்றும் இரண்டு, மூன்று, நான்கு சக்கர வாகனங்களில் பொருட்கள் விற்பனை செய்பவர்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 4 | காமராஜர் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிவறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 5 | அறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிவறை எண்.01–க்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 6 | அறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிவறை எண்.02–க்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 7 | தினசரி மார்கெட் வளாகத்தில் உள்ள கட்டண கழிவறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 8 | புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துகள் வருகை, புறப்படும் நேரம் மற்றும் வர்த்தக விளம்பரம் செய்யும் உரிமம் |

**பட்டியல் எண்.02**

**2021-2022- முதல் 2023–2024 வரையிலான மூன்று ஆண்டு குத்தகை இனங்கள் விவரப்பட்டியல்**

| வ. எண் | ஏல இனத்தின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் பொறுப்பு தொகை தனித் தனியாக | சொத்துமதிப்பு சான்றிதழ் 01.01.2021–க்கு பின்னர் பெற்றதாக இருக்க வேண்டும் | சொத்துமதிப்பு சான்றிதழ் இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | பெரம்பலூர் நகராட்சி அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் மற்றும் காமராஜ் பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் | 2,50,000 | 10,00,000 | 5,00,000 |
| 2 | பெரம்பலூர் நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் | 50,000 | 2,00,000 | 1,00,000 |
| 3 | வண்டிப்பேட்டை உரிமம் – நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தலைசுமை மற்றும் இரண்டு, மூன்று, நான்கு சக்கர வாகனங்களில் பொருட்கள் விற்பனை செய்பவர்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,00,000 | 4,00,000 | 2,00,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | காமராஜர் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிவறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 2,00,000 | 8,00,000 | 4,00,000 |
| 5 | அறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிவறை எண்.01–க்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1,00,000 | 4,00,000 | 2,00,000 |
| 6 | அறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிவறை எண்.02–க்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1,00,000 | 4,00,000 | 2,00,000 |
| 7 | தினசரி மார்கெட் வளாகத்தில் உள்ள கட்டண கழிவறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1,00,000 | 4,00,000 | 2,00,000 |
| 8 | புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துகள் வருகை, புறப்படும் நேரம் மற்றும் வர்த்தக விளம்பரம் செய்யும் உரிமம் | 25,000 | 1,00,000 | 50,000 |

**ஆடு அடிக்கும் இடம் கட்டணம் வசூலிக்கும் விபரம்**

| வ.எண் | விபரம் | 01.04.2021 முதல் உள்ள கட்டணம் ரூ. |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | ஆடு ஒன்றுக்கு | 30 |

**வண்டிப்பேட்டை உரிமம் – நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தலைசுமை மற்றும் இரண்டு, மூன்று, நான்கு சக்கர வாகனங்களில் பொருட்கள் விற்பனை செய்பவர்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்**

| வ. எண் | விபரம் | 01.04.2021–முதல் உள்ள கட்டணம் ரூ. |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | பாரமேற்றிய லாரி ஒன்றுக்கு ஒவ்வொரு தடவைக்கும் | 100 |
| 2 | வேன் ஒன்றுக்கு ஒரு தடவைக்கு | 50 |
| 3 | பாரமேற்றிய இரட்டை மாட்டுவண்டி ஒன்றுக்கு ஒவ்வொரு தடவைக்குக்கும் | 30 |
| 4 | பாரமேற்றிய ஒற்றை மாட்டுவண்டி அல்லது குதிரை வண்டி ஒரு தடைவைக்கு | 30 |
| 5 | பாரமேற்றிய கைவண்டி ஒன்றுக்கு ஒவ்வொரு தடவைக்குக்கும் | 20 |
| 6 | பார தலைச்சுமை ஒன்றுக்கு | 10 |
| 7 | காய்கறி மூட்டை ஒன்றுக்கு | 10 |
| 8 | வாழை இலை கடை ஒன்றுக்கு | 20 |
| 9 | பூக்கூடை ஒன்றுக்கு | 10 |
| 10 | இரவு டிபன் வண்டி | 20 |
| 11 | கரும்பு கடை 1–க்கு | 10 |
| 12 | வெற்றிலைக்கடை மொத்தம் மற்றும் சில்லரை வியாபாரம் | 20 |
| 13 | பழம், தேங்காய் வியாபாரம் (வாழைப்பழம் 100–க்கு) | 20 |
| 14 | பலசரக்கு வியாபாரம் | 20 |

| | | |
|---|---|---|
| 15 | காபி, சோடா, சர்பத் வியாபாரம் | 20 |
| 16 | ரொட்டி, பிஸ்கட் வியாபாரம் | 20 |
| 17 | பொரிகடலை தட்டுகளில் தூக்கி விற்க 1–தட்டுக்கு | 10 |
| 18 | மீன் அல்லது உலர்ந்த மீன்கடை பெட்டி சுமைக்கு | 10 |
| 19 | கோழிமுட்டை, வாத்து முட்டை சுமை 1–க்கு | 10 |
| 20 | சுண்ணாம்பு வியாபாரம் | 10 |
| 21 | எண்ணெய் வியாபாரம் | 10 |
| 22 | வளையல் வியாபாரம் | 10 |
| 23 | பாசி பவளம் வியாபாரம் | 10 |
| 24 | புகையிலை வியாபாரம் | 10 |
| 25 | வெங்காயம் வியாபாரம் | 10 |
| 26 | பொடி, சுருட்டு, வெற்றிலை வியாபாரம் | 20 |
| 27 | தகரம், இரும்பு பொருட்கள் வியாபாரம் | 20 |
| 28 | புத்தக வியாபாரம் | 20 |
| 29 | அரிவாள் முதலிய இரும்பு சாமான்கள் வியாபாரம் | 20 |
| 30 | ஜவுளி வியாபாரம் ரெடிமேட் ஜவுளி வியாபாரம் | 20 |
| 31 | கோரைப்பாய், தார்பாய், ஓலைப்பாய் ஆகிய வியாபாரத்திற்காக | 20 |
| 32 | கூரைப்பெட்டி வியாபாரம் | 20 |
| 33 | பலசரக்கு வியாபாரத்திற்கு | 20 |
| 34 | மிளாகாய் வியாபாரம் | 20 |
| 35 | பாணிபூரி வண்டி 1–க்கு | 20 |
| 36 | கோழி, சேவல், புறா, வாத்து முதலியன விற்பனைக்கு | 20 |
| 37 | ஆடு, கடா, பன்றி, விற்பனைக்கு | 50 |
| 38 | பலகார வண்டி 1–க்கு | 10 |
| 39 | பானை சட்டி விற்பனைக்கு | 10 |
| 40 | இதர கடைகள் / தரை கடைகளுக்கு | 20 |
| **பண்டிகை விசேச நாட்களில் வசூலிக்கப்படும் கட்டணம்** | | |
| 41 | கரும்பு, வாழைத்தார் ஏற்றிவரும் மாட்டுவண்டிக்கு ஒரு தடைவைக்கு | 30 |
| 42 | கரும்பு, வாழைத்தார் ஏற்றிவரும் லாரி / டிராக்டர் ஒரு தடைவைக்கு | 80 |
| 43 | கரும்பு மற்றும் வாழைத்தார், வெங்காயம் 8X4 அளவு ஒவ்வொன்றுக்கும் ஒரு தடவைக்கு | 20 |

**கட்டணக் கழிவறை மற்றும் குளியலறைகளில் கட்டணம் வசூலிக்கும் விபரம்**

| வ.எண் | விபரம் | 01.04.2021 முதல் உள்ள கட்டணம் ரூ. |
|---|---|---|
| **1** | **2** | **4** |
| 1 | சிறுநீர் கழிக்க ஒரு நபருக்கு ஒரு முறைக்கு | 1.00 |
| 2 | மலம் கழிக்க ஒரு நபருக்கு ஒரு முறைக்கு | 2.00 |
| 3 | குளியலறை ஒரு நபருக்கு ஒரு தடவைக்கு | 3.00 |

<table>
<tr>
<td></td>
<td>

மேற்படி பட்டியல் (1) ல் கண்டுள்ள இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அவ்வாறு உரிமம் கோரப்படும் இனங்களுக்கு பட்டியல் 2ல் கண்டுள்ள வைப்புத் தொகை, கூடுதல் வைப்புத் தொகை மற்றும் சால்வென்சி தொகைகளை நிர்ணயம் செய்துகொள்ளவும், மேலும், மேற்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொடர்பான அறிவிப்புகள் அச்சிடுவது மற்றும் செய்திதாள் விளம்பரம் ஆகியவற்றிக்கு ஆகும் உத்தேச செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1) பட்டியலில் கண்டுள்ள (8) உரிம இனங்களுக்கும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரலாம்.
2) பட்டியல் 2ல் கண்டுள்ள விவரப்படி ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை கூடுதல் வைப்புத் தொகை மற்றும் சொத்துமதிப்பு சான்று மற்றும் சொத்துமதிப்பு சான்றில்லாதவர்கள் செலுத்த வேண்டிய பொறுப்புத் தொகை ஆகியவற்றை நிர்ணயம் செய்யவும் உத்தேச செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: /2020/ஆ2**

</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.12.2020</td>
<td>

**பொருள் 29** இந்நகராட்சியின் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-2020 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 17.12.2019 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><td colspan="5">சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-2020</td></tr>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விவரம்</th><th>மதிப்பீடு தொகை (இலட்சம்)</th><th>வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">பெரம்பலூர் நகராட்சி துறைமங்கலம் மூன்று ரோட்டில் பஸ் பேருந்து நிலையம் (பயனியர் நிழற்குடை) அமைக்கும் பணி</td><td rowspan="2">10.00</td><td>G. கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (–) 0.23% மதிப்பீட்டிற்கு குறைவு</td><td rowspan="2">குறைந்த விலைப்புள்ளி அளித்த G. கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம்</td></tr>
<tr><td>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.51% மதிப்பீட்டிற்கு அதிகம்</td></tr>
</table>

அ.கு.

1. மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த G.கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் அவர்களின் (–) 0.23 % குறைந்த மதிப்பீட்டினை ஏற்கலாம்.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண் :8956/2019/இ1**

</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 453 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 31.12.2020 | **<u>பொருள் 30</u>** பொது சுகாதார உபயோக பயன்பாட்டிற்கு தேவையான கிருமி நாசினிகள் மற்றும் கொசுமருந்து தெளிப்பதற்கு தேவையான Temephos 50% EC-40 லிட்டர், மற்றும் PYRETHRUM- 2% EXTRACT – 600 லிட்டர், ஆகிய கிருமி நாசினி பொருட்கள் வாங்கி வழங்க கோரி துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு வழங்கியுள்ளார்கள் எனவே பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி தேவையான கிருமி நாசினி பொருட்கள் வாங்குவதற்கும், மேற்படி பொருட்களை தமிழ்நாடு மருத்துவகழக நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ. 10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம்) மன்ற அனுமதிக்கும் இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண் :5391/2020/v¢1</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 454 அனுமதிக்கப்பட்டது |
| 31.12.2020 | **<u>பொருள் 31</u>** பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் 26.01.2021 ஆம் நாளன்று நடைபெறும் குடியரசு தின விழாவை சிறப்பாக கொண்டாட முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்வதன் பொருட்டு பெரம்பலூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் பெரம்பலூர் நகராட்சிக்கு கீழ் கண்டவாறு பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br>1. திடலில் சிவப்பு கம்பள விரிப்பு ,<br>2. விளக்கு தோரண வசதி,<br>3. மைக்செட்/ ஹேண்ட் மைக்,<br>4. சாமியானா பந்தல் மற்றும் சேர்<br>5. தற்காலிக கழிப்பறை வசதி ,<br>6. குடிநீர் வசதி<br>7. குப்பை தொட்டிகள் அமைத்தல்<br>8. ஜெனரேட்டர் வசதி<br>மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 1.00/- இலட்சத்துக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்கண்ட பணி அரசு விழா என்பதால் பணியின் அவசர அவசியம் கருதியும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடரியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண் : 007599 /2020/இ1</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 455 அனுமதிக்கப்பட்டது |

// ஒம் // திரு . S. குமரிமன்னன்
தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
பெரம்பலூர் நகராட்சி